Registered asa News paper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 48

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 15 ஆம் நாள் றம்ளான் 12 (28-1-64) செவ்வாய்க்கிழமை இதழ் 351

# லிகிதர் வெளிநடப்பு அமைச்சு விசாரணை

"யாழ். மாவட்டம்

## குறியீட்டு சேமிப்பு லட்சியத்தை அடையவில்லை"

—கேட் முதலியார் தியாகராஜா

### அகிலஇலங்கை சேமிப்புவாரம் கொண்டாட முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்டம் 1963 செப்டம்பர் வரையான 12 மாதங்களில், ரூ. 35, 14,257-50 சேமித்திருப்பதாக யாழ்ப்பாண மாவட்ட சேமிப்புக் கமிட்டியில் பேசிய கேட் முதலியார் வி. தியாகராஜா கூறினர். அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா இக்கூட்டத்திற்கு வர இயலாததால், உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினர் தலைமை வகித்தார்.

சென்ற ஆண்டு குறியீட்டு லட்சியமான ரூ. 50 லட்சத்தை அடைய முடியாதது பற்றி அவர் வருத்தம் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"வாழ்க்கைச் செலவு உயர்வு, அரசாங்கத்தின் கலால் கொள்கை, அரசியல் நிலைமை, வேலை இழப்பு, அரசாங்கத்தினாலும், தனிப்பட்டவர்களினாலும் ஆரம்பிக்கப்பட்ட பல சேமிப்பு இயக்கங்கள் ஆகியன இந்தக் குறைபாட்டுக்கான சில காரணங்கள். வாழ்க்கைச் செலவைக் குறைக்க பாரதூரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இறக்குமதி செய்ய முடியாத உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்க வேண்டும். அரசாங்கத்தின் சம்பளக் கொள்கை நடைமுறைக்கேற்றதாய் இருக்க வேண்டும்.

அரசாங்கம் யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்தியில் இன்னும் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். சிங்களம் மட்டும் கொள்கையால் வேலையிழந்தவர்களுக்கு (அரசாங்கத்தின் தேசியமயக கொள்கையால் பாதிக்கப் பட்டவர்களைப் போன்று) அரசாங்க நிறுவனங்களில் வேலையளிக்கப் பட வேண்டும். இவ்வாண்டு அகில இலங்கை சேமிப்பு வாரம் ஒன்று நடத்தப்பட வேண்டும்"

கமிஷனர் திரு. வி. சச்சிதானந்தன் பேசிய போது யுத்த காலத்தில் நடைபெற்றதைப் போல அகில இலங்கை சேமிப்பு வாரம் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொண்டார்.

மார்ச் 17-ம் திகதி முதல் 23-ம் திகதி வரை சேமிப்பு வாரம் கொண்டாடுவதென்ற யோசனையை கமிட்டி ஏற்றுக் கொண்டது. இதற்காக ஒரு உப கமிட்டியும் அமைக்கப்பட்டது.

1963-64-ம் ஆண்டுக்கு சேமிப்புக் குறியீடு ரூ 40 லட்சம் இருக்க வேண்டுமெனவும் கமிட்டி ஒப்புக் கொண்டது.

மாவட்டத்தில் 900 சேமிப்புக் குழுக்கள் இருப்பதாக மாவட்ட மேலதிகாரி திரு. பி குமாரசிங்கம் தனது அறிக்கையில் கூறினர்

## சுகாதார அத்யட்சகர் கொழும்பு செல்கிருர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் சுகாதார இலாகா அத்தியட்சகர் காரியாலயத்திலிருந்து வெளிநடப்புச் செய்து இன்னும் வேலைகுத் திரும்பாமலுள்ள ஆறு சிங்கள குமாஸ்தாக்களின் விவகாரம்பற்றி ஆலோசனை செய்வதற்கு யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகர் டாக்டர் ஜி. என். ஆர். நதானியலையும் கணக்காளரையும் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி கொழும்புக்கு அழைத்துள்ளார். நாளை 21-ந் திகதி இவர்களிருவரும் கொழும்பில் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைச் சந்தித்துப் பேசுவர்.

சிங்களக் கடிதங்களுக்கும் குறிப்புக்களுக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு இணைக்க வேண்டுமென சுகாதார அத்தியட்சகர் பிறப்பித்த உத்தரவை ஆட்சேபித்து இந்த ஆறு குமாஸ்தாக்களும் காரியாலயத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். சிங்களத்தை அமுல் நடத்துவதற்காகவே தாம் யாழ்ப்பாணம் வந்துள்ளதாக பிரஸ்தாப குமாஸ்தாக்கள் தெரிவித்திருந்தனர்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த உத்தியோக மொழி இலாகா உதவிக் கமிஷனர் சுகாதார இலாகாவுக்குச் சென்றிருந்த போது அத்தியட்சகருக்கு சிங்களம் தெரியாததாகையால் சிங்களக் கடிதங்கள் குறிப்புக்களுடன் ஆங்கில மொழிபெயர்ப்பு இணைக்குமாறு குமாஸ்தாக்களை அவர் கேட்டுக் கொண்டதற்கு அவர்கள் இணங்கியதாகவும் ஆனல் மறுநாளே தாம் அவ்வாறு செய்ய முடியாதெனத் தெரிவித்து வெளியேறியதாகவும் தெரிகிறது.

இவர்களது வெளிநடப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவை டைரக்டருக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகர் தந்தி அனுப்பியிருந்தார்.

**பொலிசில் புகார்**

இதற்கிடையில் வெளிநடப்புச் செய்த குமாஸ்தாக்கள் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு வெளியே தங்களைத் தாக்குவதாகச் சிலர் பயமுறுத்தியதாகப் பொலிசில் புகார் செய்துள்ளனராம்.

இக்குமாஸ்தாக்களின் வெளிநடப்புபற்றி விசாரணை செய்ய வேண்டுமென தொழிற்சங்கங்களும் மேலிடத்தைக் கேட்டிருந்தன.

## "தமிழ் ஆசிரியர்களுக்கு சிங்கள 'செக்' அனுப்பாதீர்?"

### தமிழரசு எம். பி. க்கள் தந்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி போதிக்கும் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு, அவர்களுக்குரிய சம்பளப் பணத்தை சிங்களச் காசோலைகளாக அனுப்பி அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுத்தும் செயலை உடனடியாக நிறுத்தவேண்டுமெனக் கோரி தமிழரசுக் கட்சி எம். பி.க்களும் செனட்டரும் உதவி விதியாதிபதிக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளனர்.

தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு சிங்களக் காசோலைகள் அனுப்புவது அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதுடன் வீண் பிரச்னைகளையும் ஏற்படுத்துவதும [illegible] என்று அந்தத் தந்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாய[illegible]கம், பி மாணிக்கவாசகர், எம். [illegible]ம். இராசமாணிக்கம், [illegible] துரைரத்தினம், வி. ந[illegible]ரத்தினம், வி. என். நவரத்தினம், வி. ஏ. அழகக்கோன் [illegible] தர்மலிங்கம், செனட்ட[illegible] எம். மாணிக்கம், ஏ அமிர்தல[illegible]ம் ஆகியோர் இத்தந்தியை [illegible]அனுப்பியுள்ளனர்.

கிரிக்கெட்

### 595 ரன்களுக்கு தெ. ஆபிரிக்கா அவுட்

அடிலெய்ட், ஜன. 27

அவுஸ்திரேலியாவுக்கும் தென்னபிரிக்காவுக்குமிடையே இங்கு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தென்னபிரிக்க முதல் இன்னிங்ஸில் 595 ரன்கள் எடுத்து அவுட்டானது. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 345 ரன்கள் எடுத்தது.

---

### மவுண்ட்பேட்டன்

புதுடில்லி, ஜன. 27

டில்லி வந்திருக்கும் மவுண்ட்பேட்டன் பிரபு இன்று பாதுகாப்பு மந்திரி திரு. சாவனைச் சந்தித்துப் பேசினர்.

---

### கி. பாகிஸ்தான்

டாக்கா, ஜன. 27

கிழக்கு பாகிஸ்தானில் டாக்காவிலும், சுற்றுப் புறங்களிலும் இரவு 11 மணி முதல் காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

புதிய பரிகாரம்

## ஏற்றுமதி மூலம் வனவிலங்கு பாதுகாப்பு!

தெஹிவளை, திங்கள்

காட்டு யானைகளைப் பிடித்து ஏற்றுமதி செய்வதின்மூலம் வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிக்கும் ஒரு யோசனை அரசாங்கத்துக்குசமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை யானைகளுக்கு வெளிநாட்டு மார்க்கெட்டில் நல்ல கிராக்கியிருப்பதாக வனவிலங்கு பாதுகாப்பு இலாகாவின் உயர் அதிகாரி ஒருவர் கூறினர். வெளிநாடுகளிலுள்ள பலமிருகக்காட்சி சாலைகள், இதரநாட்டு யானைகளைவிட இலங்கை யானைகளையே அதிகம் விரும்புவதாயும் அவர் கூறினர். வேட்டைக்காரர்களும் விவசாயிகளும் இவைகளைச் சுட்டுக் கொல்வதை அனுமதிப்பதைவிட, ஏற்றுமதி செய்வது மேல் என அவர் கூறியிருக்கிருர்

## ஆஸ்பத்திரிக் கமிட்டிக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்

### சிங்களத்தில் வந்தகடித[illegible]த மந்திரிக்கே திருப்பியனுப்பினர்?

யாழ்ப்பாணம், செவ்வாய்

"ஒரு சமூகத்தினருக்குத் தெரியாத மொழியை அவர்களுக்கு விருப்பமில்லாமல் அவர்களின் தொண்டைக்குள் திணிக்க எந்த நாகரிகமான அரசாங்கமும் நினைக்காது. நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலையில் உங்கள் இலாகா ஊழியர் சிறுபான்மைச் ச[illegible]த்தினருடன் சிங்களத்தில் தொடர்பு கொண்[illegible] அவ[illegible]க்கு தொந்தரவு செய்வ[illegible]தல்ல,"

இவ்வாறு [illegible]ழ்ப்பாணம் அரசினர் [illegible]திரிக் குழுவின் அங்கத்[illegible] நியமிக்கப்பட்டுள்ள [illegible] எஸ். கனகசுந்தரம் ந[illegible] [illegible]யனம் கூறி

(6-ம் பக்[illegible] பார்க்க)

## மணி வாக்கு

தன் சுதந்திரத்தை பாதுகாப்பவன் எதிரிக்கு இன்னல் விளைவதையும் தடுக்க வேண்டும். இக்கடமையிலிருந்து அவன் தவறுவானேயானால் தனக்கே கெடுதி ஏற்பட ஒரு சந்தர்ப்பத்தை உண்டுபண்ணி விடுகிறான்.

—தாமஸ்பெயின்.


# ஈழநாடு

EELA NADU

EELANADU Jaffna National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு தை மீ 15 உ (28-1-64)


## பொலிஸ்பற்றி விசாரணைக் கமிஷன்

பொலிஸ் நடத்தைபற்றி விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டுமென்றும் இதற்காக சகல கட்சிகளின் ஆதரவையும் திரட்டப் போவதாகவும் வெலிமடை எம். பி. யும் ஜாதிக விமுக்திப் பெரமுனையின் தலைவருமான திரு. கே. எம். பி. ராஜரத்ன தெரிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்க யோசனைதான்.

“தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்” என்று ஒரு பழமொழியுண்டு. திரு. ராஜரத்னவுக்கும் பொலிசார் நடத்தைபற்றி விசாரிக்க வேண்டுமென்ற யோசனை, அவரை ஒரு பொலிஸ் அதிகாரி பயமுறுத்தியதாக அவரே தெரிவித்த பின்தான் புலப்பட்டுள்ளது.

1956-ம் ஆண்டில் காலிபேஸ் மைதானத்தில் தமிழ்ப்பேசும் மக்கள் சத்தியாக்கிரகம்செய்த போது அவர்களைக் காடையர்கள் தாக்கியதைப் பார்த்துக்கொண்டு பொலிசார் எதுவும் செய்யாமலிருந்தது பற்றியோ, தமிழரின் கடைகள் பொலிசாரின் கண்முன்னால் கொள்ளையடிக்கப்பட்டதுபற்றியோ, தமிழர்கள் பொலிஸாரின் முன்னால் தாக்கப்பட்டது பற்றியோ திரு. ராஜரத்தின அப்பொழுது கவலைப்படவில்லை. பொலிஸாரின் நடத்தைபற்றி விசாரணை செய்ய வேண்டுமெனக் கேட்கவுமில்லை.

சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கை என்ற போர்வையில் தமிழ்பேசும் பகுதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பது பற்றி பார்லிமெண்டில் புகார் தெரிவிக்கப்பட்ட சமயங்களில் கூட அவர்களது நடத்தைபற்றி விசாரணை செய்யவேண்டுமென வெலிமடை எம். பி. குரல் எழுப்பவில்லை. தமிழ் எம். பி. ஒருவர் பொலிஸ் அதிகாரியினால் தாக்கப்பட்டு நீதிமன்றம் அவர்களைக் குற்றவாளிகளாகக் கண்டும் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுபற்றி ஜாதிக விமுக்தி பெரமுனைத் தலைவர் இதுவரை கேட்கவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு மந்திரிகள் இருவர் விஜயம்செய்த போது, அமைதியான முறையில் தமது எதிர்ப்பைக் காட்ட கறுப்புக்கொடி பிடித்த பார்லிமெண்ட் பிரதிநிதிகளையும் பொதுமக்களையும் பொலிஸார் மூர்க்கத்தனமாகத் தாக்கியது பற்றி திரு. ராஜரத்ன ஆட்சேபக்குரல் எழுப்பவில்லை; ஆட்சேபம் தெரிவித்தவர்களுக்கு அவர் ஆதரவுகூடக் காட்டவில்லை.

நிக்கவரெட்டியாவில் விவசாயிகள் ஊர்வலம் நடத்தியது போல்தான் தமிழ்ப்பேசும் மக்களும் தங்கள் ஆட்சேபத்தை அமைதியான முறையில் தெரிவித்த சமயங்களில் பொலிஸாரால் தாக்கப்பட்டார்களென்பது திரு. ராஜரத்னவுக்குத் தெரியாதா? மலைநாட்டுப்பகுதியில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது இந்நாட்டையே தாயகமாகக்கொண்டு வாழும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இம்சிக்கப்படுவதை எதிர்த்து திரு. ராஜரத்ன குரல் எழுப்புவாரா?

எதுவானாலும் பொலிசாரின் நடத்தைபற்றி விசாரிக்க ஒரு கமிஷன் நியமித்தால், பொலிசாருக்கு எங்கிருந்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதென்ற உண்மையும் வெளிவரும். இந்த உண்மையை அறிய வேண்டுமென உண்ணாவிரதமிருந்த திரு. முதியான்சே தென்னக்கூனும் தெரிவித்திருந்தார்.

1956-ம் ஆண்டு தொடக்கம் பொலிசாரின் நடத்தைபற்றி விசாரிக்க வேண்டுமெனவும் இதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டுமெனவும் திரு. ராஜரத்ன கோர வேண்டும். அவர் இதை விரும்பாவிட்டாலும் அவர் ஆதரவு கேட்கும் கட்சிகள் இதை வற்புறுத்த வேண்டும்.

## அமைச்சர்கள் பொறுப்பு

சம்பளப்பட்டியலில் தமது பெயர் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தால் தமிழ் அரசாங்க ஊழியர் தாமது சம்பளத்தைப் பெற மறுத்துவிட வேண்டுமென்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் கூட்டமொன்றில் அதன் தலைவர் யோசனை தெரிவித்துள்ளார். சிங்களப் பெயரின் கீழ் தமிழில் தமது பெயரை எழுதுவதுடன் முத்திரையில் தமிழில் கையொப்பமிட்டு சம்பளப்பணத்தைப் பெறலாம் என்று அதே கூட்டத்தில் மற்றொருவர் யோசனை தெரிவித்துள்ளார். இன்று அரசாங்க ஊழியருக்கு சம்பளதினம். இன்று இப்பிரச்னை எழலாம்.

இதே பிரச்னை சில மாதங்களுக்கு முன் ஏற்பட்டபோது சிங்களம் தெரியாத ஊழியர்களுக்கு அவர்களின் பெயர்களின் கீழ் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டுமென மேலிடம் உத்தரவிட்டு நிலைமை சமாளிக்கப்பட்டது. இப்பொழுதும் இதே முறையைக் கைக்கொண்டால், பிரச்னை பெரிதாகாமல் தடுக்க முடிவதுடன் அரசாங்க காரியாலயங்களில் அமைதியும் நிலவும்.

நாட்டின் நிர்வாக அலுவல்களை உத்தியோக மொழியான சிங்களத்தில் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையே தவிர சிங்களத்தை, சிங்களம் தெரியாத மக்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணித்து அவர்களுக்கு சங்கடம் ஏற்படுத்துவதல்ல என்பதை அரசாங்க ஊழியர்களில் ஒரு பகுதியினர் உணரவில்லையென்பது அவர்களின் செயல்களிலிருந்து தெரிகிறது.

அரசாங்க சேவையிலுள்ள ‘குட்டித்தேவதை’களின் விதண்டாவாதச் செய்கை அரசாங்க காரியாலயங்களில் வேலைகள் சுமூகமாக நடைபெறுவதற்குக் குந்தகம் விளைப்பதுடன் நாட்டின் அமைதியையும் குலைக்கக் கூடிய ஆபத்தைத் தோற்றுவிக்கும். இந்தத்தேவதைகள் விஷயத்தில் பொறுப்புள்ள மந்திரிகள் உடன்நடவடிக்கை எடுக்காவிட்டால் நிலைமை கட்டுமீறிவிடுமென்பதை உணர வேண்டும். உத்தியோக மொழியை அமுல் செய்வது தான் ஊழியர்களின் வேலையென்பதையும் சிறுபான்மையினர் மீது திணித்து அவர்களுக்குக் கஷ்டம் கொடுப்பது அவர்களது வேலையல்லவென்பதையும் ஊழியருக்கு நினைவுபடுத்தவேண்டும்.

சிறுபான்மையினருக்குக் கஷ்டம் கொடுக்க மாட்டோமென்று பிரதமர் அளித்தவாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்க மந்திரிகளினதும் கடமையென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

~~ கொழும்புக் கடிதம் ~~

# ஜயவர்த்தனவின் பேச்சும் நாகநாதனின் பிரசாரமும்!

~~ நமது நிருபர் ~~

சமீபத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி படையெடுத்து வந்த தூதுக்குழு ஒன்று இங்கு வந்து யாழ்ப்பாணத்தவர்களைப் பற்றி கேவலமான பிரசாரத்தைச் செய்துவிட்டு மறுபடியும் பிறந்த ஊரையும் வளர்ந்த ஊரையும் வளரும் ஊரையும் நோக்கி புறப்பட்டுச் சென்றது. ஒரு அலுவலைச் செய்வதற்காக கொழும்புக்கு வந்த இவர்கள் அந்த அலுவலைச் செய்யாது யாழ்ப்பாணத்தவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பற்றி பட்டோலை வாசித்து தமது சாயத்தையே வெளுறச் செய்துகொண்டு திரும்பினார்கள்.

இவர்கள் வந்து சந்தித்த பிரமுகர்களில் பெரும்பான்மையோர்; “வஞ்சம் தீர்க்கவந்த குழு” என்று தமக்குள்ளேயே கதைத்து அலட்சியமாக இவர்களை நடத்தி வருவனுப்பிவைத்ததாகவும் கூறப்படுகிறது. இவர்களுடைய போக்கில் ஆக ஆச்சரியத்தையூட்டியதென்னவென்றால் தமிழல பேசுவதற்கு வசதியிருந்தும் நாங்கள் ஆங்கிலத்தில் தான் நமது கொள்கையை விளக்கிக் கூறப்போகிறோமென்று கூறியது.

இதைத் தொடர்ந்து அதே பிரச்னை சம்பந்தமான இன்னுமொரு தூதுகோஷ்டி இங்கு வந்தது. அந்தக் கோஷ்டியினர் தங்களுக்கு ஆங்கிலம் தெரிந்த போதிலும் தமிழில் தான் பேசவந்திருப்பதாகக் கூறி தமது காரியத்தைச் சரிவரச் செய்து முடித்துவிட்டு யாழ்தேவியில் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஏற்கனவே யாழ்நகரில் பெரும் போட்டா போட்டிகளில் ஈடுபட்டிருக்கும் இந்த இரண்டு கோஷ்டிகளிலும் எந்தக் கோஷ்டி மொழிப்பற்றுடன் நடந்துகொண்டதென்பதை இங்கு சொல்லவேண்டியதில்லை.

பாராளுமன்ற படிகள் ஏறி இறங்குவதுடன் சம்பந்தப்பட்ட பிரச்னையாதலால் மேற்கொண்டும் இதைப்பற்றி விஸ்தரிக்க வேண்டியதில்லை.

### ஜே. ஆர். பேச்சும் அதன் எதிரொலியும்

பொரளைத் தேர்தல் பிரசாரத்தின் போது யூ. என். பியின் பெருந் தலைகளில் ஒன்றான ஜே. ஆர். ஜெயவர்த்தன தமிழர்கள் பற்றியும் மொழிக் கொள்கைகள் பற்றியும் விஷமப் பிரசாரம் செய்ததாக தமிழர் அரசியல் வட்டாரங்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன. இதன் எதிரொலி பாராளுமன்றம் வரையும் எதிரொலிக்க ஆரம்பித்திருக்கிறது.

ஜே. ஆர். வகுப்புவாதப்பிரசாரம் நடத்திவிட்டதாகவும் தமிழர்களுடைய பிரச்னைகளை தட்டிக்கழிக்கும் வகையில் பேசிவிட்டதாகவும் தமிழரசுக் காரியதரிசி டாக்டர் நாகநாதன் பகிரங்கமாக குற்றம்சாட்டிவருகிறார். பாராளுமன்றத்திற்கு வெளியில் நின்ற அரசியல்வாதிகள் அவ்வளவு பேரிடத்திலுங்கூட அவர் இதை சுட்டிக்காட்டி “இது நியாயந் தானா” என்று கேட்டுக்கொண்டு திரிந்தார், துடிதுடிப்பான டாக்டரின் இந்தக் கேள்வி ஜே. ஆர். காதுக்கெட்டியதும் பெரும் புயலையே அது கிளப்பியிருந்தது.

டாக்டர் நாகநாதனின் இந்தப் பிரசாரத்தை காதில் போட்டுக்கொண்ட ஜே. ஆர். உடனடியாக நாகநாதனைத் தேடிப் பிடித்து பெரியதொரு சமாளிப்புப் பிரசங்கத்தைச் செய்தார். ஜே ஆரின் பிரசங்கம் “சமாளிப்புப்” பிரசங்கத்திலும் பார்க்க ஒரு “சமாதான” பிரசங்கமாக இருந்ததென்றே சொல்லவேண்டும்.

ஜே. ஆரின் சமாதானப் பிரசங்கம் அவ்வளவுடன் நின்றுவிடவில்லை. இதர தமிழ் எம். பி.க்களையும் அவர் சந்தித்து “எட்டுத் திசைகளிலும் உள்ளவர்கள் அறிய நான் தமிழர்களுக்கு எதிராகவோ அல்லது வஞ்சம்தீர்க்குமுகமாகவோ நடந்துகொள்ளவில்லை” யென்று சத்தியமும் செய்து கொடுத்ததை பாராளுமன்றத்திற்கு வந்திருந்த அநேகர் கவனித்தார்கள்.

இதற்குக் காரணமெல்லாம் அடுத்த பொதுத் தேர்தல் தான் என்பது அநேகருடைய கருத்தாக இருக்கிறது.

### இலங்கையிலுள்ள பாகிஸ்தானியர்

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் இலங்கைக்கு வந்திருந்தபோது பாகிஸ்தானியர்களையெல்லாம் தமது ஊருக்கு அழைத்துச்செல்லப் போவதாக அபிப்பிராயம் தெரிவித்திருந்தாரல்லவா? இதை இலங்கையிலுள்ள பாகிஸ்தானியர்கள் மனக் கசப்புடன் நோக்குவதாக பாகிஸ்தானிய வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இலங்கையிலுள்ள வர்த்தக சுவர்க்க பூமியில் அரசர்களாகவும், குட்டி ராசாக்களாகவும், வணங்காமுடிகளாகவும் இருந்துவரும் பாகிஸ்தானியர்கள் பாகிஸ்தானை “இக்கரைக்கு அக்கரை பச்சை” என்று கருதியது கிடையாது.

இதைவிட இன்று பாகிஸ்தானிலோ வர்த்தகர்கள் எல்லோரும் உருக் குலைக்கப்பட்டு, ஆஸ்திகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு நடுத் தெருவில் விடப்பட்டிருக்கிறார்களாம். இந்த நிலையில் இலங்கையிலிருந்து நாங்களும் போய் ஏன் உருக்குலையவேண்டுமென்று இந்த பாகிஸ்தானிய வட்டாரங்கள் கருதுகின்றன.

மூஸாஜீஸ், ஜபாஜீஸ், ஆதம்ஜீ லுக்மான்ஜீஸ், ஆதமலி போன்றவர்கள் உட்பட மற்றும் அனேக பணம் படைத்த முதலாளிகள் உள்ள செல்வத்தையெல்லாம் பறிகொடுக்க, இங்கிருந்து பாகிஸ்தானுக்குச் செல்ல விரும்புவார்களா? என்றும் இதே வட்டாரங்கள் கேட்கின்றன.

இன்னும் சில நாட்களில் இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானியர்கள் மீது கைவைக்கத் தொடங்கி பிரியாவிடை வேலைகளைச் செய்யமுனையும்போது தான் இந்த உண்மைகளெல்லாம் அம்பலமாகும் என்றும் இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

### விஜயபாகுவை விலக்கவேண்டுமாம்

முன்னாள் அம்பாறை எம். பி. யும் தற்போதைய மீரிகம எம். பி. யுமான விஜயபாகு விஜயசிங்காவை சுதந்திரக் கட்சியிலிருந்து விலக்கிவிட்டால் என்னவென்று சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர் மேல் வட்டாரத்தைக் கேட்கவிருக்கிறார்கள்.

இவர் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்திற்கு எதிராகத் தொடர்ந்து இயங்கிவருவதுதான் இதற்குக் காரணமாகவிருக்கிறது. பாராளுமன்றத்தில் விஜயபாகு இப்போது ஒரு இடதுசாரிபோன்று மாறிக்கொண்டுவருகிறார். எதிர்க்கட்சியினர் எந்தப்பிரச்னையை எடுத்துக்கொண்டாலும் அதை சர்க்கார் கட்சியில் இருந்தபடியே ஆதரிப்பதற்கு விஜயபாகு பின்வாங்குவதில்லை.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் அதாவது மெஜாரிட்டிப் பலமிழந்திருக்கும் இந்தச்சமயத்தில் பிரதமர் இனிமேல் யார்மீதாவது கைவைப்பாரா என்று கேட்பவர்கள் விஜயபாகுவும் அதையறிந்துதான் துள்ளுகிறார் எனக் கூறுகிறார்கள்.

விஜயபாகு விஜயசிங்க முன்னாள் செனட் சபைத் தலைவர் சரத் விஜயசிங்காவின் மிக நெருங்கிய உறவினர் என்பதை அறிந்தவர்கள் சரத்துக்கும் பிரதமருக்கும் இடையிலுள்ள தகராறுகளைத் தொடர்ந்துதான் விஜயபாகு இந்த நேரடி மோதலில் இறங்கியிருக்கிறார் எனக் கருதுகிறார்கள்.

## நயினாதீவில் தைப்பூச விழா

யாழ்ப்பாணம், செவ்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் இன்று தைப்பூச விழா சிறப்பாக நடைபெறவிருக்கிறது. இன்று பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அம்பாள் ஊஞ்சல் வாகனத்தில் ஆரோகணித்து வீதி உலாவரும் அலங்காரக் காட்சியும் நடைபெறும்.

பிற்பகலில் புதிதாகக் கட்டப்பட்ட மேடையில் காணி, நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமையில் விசேஷ மேளக்கச்சேரி, பக்திப்பாடல்கள், கதாப்பிரசங்கங்கள், சமயச் சொற்பொழிவு முதலியன நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

‘தேவி நின் திருவருள் தாராயோ’ என்னும் பொருள் பற்றி திரு. கு. வி. செல்லத்துரை சொற்பொழிவு நிகழ்த்துவார். திரு. சு. கணபதிப்பிள்ளையும் ஸ்ரீ. ப. முத்துக்குமாரசாமி ஐயரும் பக்கவாத்தியசகிதம் பக்திப் பாடல்கள் பாடுவர். மணிபாகவதரின் சிஷ்யன் திரு. கணேசசுந்தரம் “பக்தகௌரி” என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்வார்.

## கூட்டுறவு ஸ்தாபன கடை நிறுவவேண்டும்

### கிராமசபை கோரிக்கை

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணையில் கூட்டுறவுமொத்த விற்பனை நிலையம் ஒன்றை நிறுவ வேண்டுமெனக் கூட்டுறவு அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற வேலணைக் கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. சபைத்தலைவர் திரு. கே. சதாசிவம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

வேலணையில் உள்ள வியாபாரிகள் ஊர்காவற்றுறையில் பொருட்களை வாங்கிக் கொண்டுவந்து கூடியலாபம் வைத்து விற்கிறார்கள் எனவும் வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறிவருவதால் பொருளாதார நிலை குறைவடைகிறது என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

நேரடியாக யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சமாசத்தில் பொருட்களைப் பெறுவதற்கு வேலணை வியாபாரிகளுக்கு வசதியளிக்கப்பட வேண்டுமென உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## கொழும்பு தமிழ்ச் சங்கதீர்மானம்

கொழும்பு, திங்கள்

“தமிழையும் நம்நாட்டுஆட்சி மொழியாக்குவதற்கு உதவும் வழிவகைகளை வகுப்பதன் பொருட்டு நாடு முழுவதிலுமுள்ள தமிழ்ச் சங்கங்கள், கலாசார சங்கங்கள் முதலிய அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு அவற்றுடன் கலந்து ஆலோசனை செய்தல் வேண்டும்” என்று அண்மையில் நடைபெற்ற கொழும்புத்தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு தீர்மானித்துள்ளது. நாடு முழுவதிலுமுள்ள தமிழ்பேசும் மக்களின் மொழி, சமய, கலாசார சம்பந்தமான சங்கங்களை கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கிழக்காபிரிக்க அரசியல்

# “ஸான்ஸிபாரில் வெளியார் தலையீட்டை சகியோம்”

## குடியரசு தினத்தன்று பல அபிவிருத்தித் திட்டங்கள்

### இந்தியா முழுவதும் ஆரம்பம்

புதுடில்லி, ஜன. 27

**குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று ராஷ்டிரபதி பவனில் நடத்தப்பட்ட விருந்தில் 6000 பிரபலஸ்தர்கள் கலந்து கொண்டனர்.**

புதிய ராஜ்யமான நாகலாந்தில் கூட்டு அணிவகுப்பு நடைபெற்றது. சிறந்தமுறையில் சேவை செய்த 2 கிராமக் காவலர்களுக்கு கவர்னர் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினர்.

காஷ்மீரில் குடியரசு தின வைபவத்தில் 1 லட்சம்மக்கள் கலந்து கொண்டனர். ராணுவமும் பொலிசும் நடத்திய அணிவகுப்பு மரியாதையை சத்ரியாஸத் (கரன்சிங்) ஏற்ருர்.

அப்போது அவர் பேசுகையில், பாகிஸ்தானின் வகுப்புக் கலவரத்தைத் தூண்டிவிடும் பொய்ப் பிரசாரத்தினால் மக்கள் ஏமாறவில்லை என்றும், சமூகங்களிடையே நல்லுறவு நிலவுவதாயும் கூறினர்.

மேற்குவங்க கவர்னர் ஸ்ரீமதி பத்மஜாநாயுடு பேசுகையில் கலகத்தின் காரணமாக உயிர் நஷ்டம் ஏற்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டார். அகதிகளைக் குடியமர்த்தும் வேலைகளும், நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகளும் மேற்கொவ்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் நடைபெற்ற குடியரசுதின விழாக்களில் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் செய்தி வாசிக்கப்பட்டது.

மாஸ்கோ ரேடியோ இன்று வெளியிட்ட ஒரு ஒலிபரபபுச் செய்தியில் இந்தியா குடியரசாகி 14 ஆண்டுகளில் பொருளாதார அபிவிருத்தித்துறையிலும் கலாச்சாரத்துறையிலும் பெரும் சாதனையை நிகழ்த்தியிருக்கிறதென்றும் அதன் சமாதான சகவாழ்வுக் கொள்கையே இதற்குக் காரணம் என்றும் கூறியது.

குடியரசு தினத்தன்று நாட்டின் பலபகுதிகளிலும் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் பல ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் பலபுதிய கட்டிடங்களும், பள்ளிக்கூடங்களும் திறந்து வைக்கப்பட்டன.

சிக்கிமில் பாலங்கள் அமைப்புத் திட்டத்தில் கடைசி எஃகு பாலம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நேபாளம், பர்மா ஆகிய நாடுகளிலும் விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கிழக்கு பாகிஸ்தான் தலைநகர் டாக்காவில், நிலைமை இன்னும் சீர்திருந்தாததால் உத்தேச வரவேற்பு நிகழ்ச்சிகளை இந்திய தூதராலயம் ரத்துச்செய்தது.

பெல்கிரேட்டிலுள்ள இந்தியத் தூதராலயத்தில் சீன ஆக்கிரமிப்புப்பற்றிய வரலாற்றுத் திரைப்படம் காட்டப்பட்டது.

சிங்கப்பூரிலுள்ள இந்தியத் தூதராலயத்திலும் குடியரசு தின வைபவங்கள் நடத்தப்பட்டன.

குடியரசு தினத்தன்று சென்னைக்கருகே புதிய அலுமினியத் தொழிற்சாலைக்கான வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆந்தாவில் இரு மின்சார நிலையங்களுக்கான திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பீகாரில் பல பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அஹமதாபாத்தில் சிவில் ஆஸ்பத்திரி அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## 400 கால்நடைகள் கடத்தப்பட்டன

திரிபுரா, ஜன. 27

ஏராளமான ஆயுதம் தாங்கிய பாகிஸ்தானியர் இந்திய பகுதிக்குள் புகுந்து மேய்ந்து கொண்டிருந்த 400 கால்நடைகளையும், அவற்றை மேய்த்துக் கொண்டிருந்த நபரையும் கடத்திச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. இவற்றைத் திருப்ப ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கோவாவில்

## தேவாலயங்களை பழுதுபார்க்க உதவி

பஞ்சிம், ஜன. 27

பஞ்சிமிலுள்ள பழைய திருச்சபை தேவாலயங்களைப் பழுதுபார்ப்பதற்கும், இதர புனித சின்னங்களைப் புதுப்பிப்பதற்கும், தேவாலய பொருட்காட்சிசாலையொன்றை நிறுவவும் கோவா ராஜ்யத்திற்கு இந்திய அரசாங்கம் 17 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. இவ்வருட முடிவிற்குள் இந்த வேலைகள் முடிவடையும்.

## மவுண்ட்பேட்டன் — நேரு சந்திப்பு

புதுடில்லி, ஜன. 27

கடைசி பிரிட்டிஷ் வைஸ்ராயும், இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரலுமான மவுண்ட்பேட்டன் பிரபு, தமது பழைய நண்பரான பிரதமர் நேருவை நேற்று போய்ப் பார்த்து அவருடன் 30 நிமிடங்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

வெளிநாட்டு விவகாரங்களை தற்காலிகமாகக் கவனிக்கும் திரு லால்பகதூர் சாஸ்திரியையும் பிரதமர் நேற்று சந்தித்தார்.

திரு நேரு இப்போது அநேகமாக பூரண சுகமடைந்து விட்டதாக ஒரு அதிகாரி அறிவித்தார.

## பிரிட்டிஷ் நடவடிக்கை பற்றி ரஷ்யா எச்சரிக்கை

### சீனத் தூதராலயம் திறக்கப்பட்டது

மாஸ்கோ, ஜன. 27

**ஸான்ஸிபாரில் வெளிநாட்டார் தலையீடு பாரதூரமான விளைவுகளை உண்டுபண்ணும் எனரஷ்யா எச்சரித்திருக்கிறது. பிரிட்டிஷ் மக்களைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு, பிரிட்டிஷ் துருப்புக்கள் அங்கு புதிய ஆட்சிக்கெதிராகத் தலையிட முயல்வதாயும் அது குற்றஞ்சாட்டியது.**

விடுதலையடையும் புதிய நாடுகளின் சுதந்திரத்திற்கு எதிராக நடைபெறும் ஆபத்துக்களை நீக்குவதில், ரஷ்யா உதவியளிக்கும் என குருஷ்சேவ் முன்பு கூறியதற்கிசைய இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஸான்ஸிபார் தாக்கப்பட்டால் அதனல் பெரும் விளைவுகள் ஏற்படுமென ரஷ்ய எச்சரிக்கை குறிப்பிடுகிறது.

இதற்கிடையில் ஸான்ஸிபாரில் சீனத் தூதராலயம் ஒன்று திறக்கப்பட்டிருப்பதாயும், சீனத் தூதர் ஒருவர் அங்கு சென்றிருப்பதாயும் மாஸ்கோவிற்குக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

தங்கனீகா, கென்யா, உகண்டா ஆகிய நாடுகளில் இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக லண்டன் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

கிழக்கு ஆபிரிக்க நிகழ்ச்சிகளுக்கு கம்யூனிஸ்ட் தூண்டுதலே காரணம் எனத் தெரியவருவதாக பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக் டகளஸ் ஹியூம் கூறினர்.

## 50,000 ஜப்பானியர் ஆர்ப்பாட்டம்

### ஜெட் விமானங்கள் நிறுத்தப்பட்டதற்கு ஆட்சேபம்

டோக்கியோ, ஜன. 27

டோக்கியோவுக்கருகிலுள்ள யோகோடா அமெரிக்க விமானத்தளத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டு 50,000 ஜப்பானியர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லக்கூடிய ஜெட் விமானங்கள் அங்கு நிறுத்தப்பட்டதை ஆட்சேபிக்குமுகமாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கம்யூனிஸ்ட் தலைமையிலான ‘சமாதானக் கமிட்டி’ சார்பில் ஒழுங்கான முறையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாக பொலிசார் அறிவித்தனர்.

ஜப்பானின் பிரதான தெற்குப்பகுதித் தீவிலுள்ள கியுஷுவிலிருந்து ‘எப்-105 டி’ ஜெட் சண்டை விமானங்களை அமெரிக்கா சமீபத்தில் யோகோட்டாவுக்கு நகர்த்தியது.

## காஷ்மீர் பொலிஸார் துப்பாக்கி பிரயோகம்

### நால்வர் மாண்டனர்

ஸ்ரீநகர், ஜன. 27

“ஆத்திரம் கொண்ட ஜனக் கூட்டத்தின் மீது பொலிஸார் மூன்று தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்தது காரணமாக 4 பேர் மாண்டனர் குறைந்தது 8 பேர் காயமடைந்தனர். கல்வீச்சு காரணமாக 12 பொலிஸார் காயமடைந்தனர்.”

இந்திய உள்நாட்டமைச்சு காரியதரிசி திரு. வி. விஸ்வநாதன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

காஷ்மீர் நிர்வாகத்தைப் பலப்படுத்துவது சம்பந்தமாக விவாதிக்கும் பொருட்டு திரு. விஸ்வநாதன் ஏற்கனவே திட்டமிட்டபடி ஸ்ரீநகருக்கு வந்திருக்கிருர்.

காஷ்மீரில் புனிதச்சின்னம் திருட்டுப்போனதைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட தடையை மீறி எங்கு நடத்தப்பட்ட கூட்டம் கலைக்கப்பட்டதால் இந்தக் குழப்பம் ஏற்பட்டது.

திருட்டுப்போன ஒரு வாரத்தில் இந்தச் சின்னம் மீட்கப்பட்டு விட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனல் இதுவரை அது பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை. நிலைமை நெருக்கடியாய் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## யுதாண்டின் கி. ஆபிரிக்கச்சுற்று

நியூயோர்க், ஜன 27

ஐ நா.தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கிழக்காபிரிக்கநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொருட்டு நாளை நியூயோர்க்கிலிருந்து புறப்படுகிருர். தங்கனீகா, உகண்டா, கென்யா ஆகிய நாடுகள் உட்பட 9 நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கும் அவர், பெப்ரவரி 29-ம் திகதி நியூயோர்க் திரும்புவார்.

## 1,500 டன் வெளிச்சவீடு

புதுடில்லி, ஜன 27

இந்தியா ஆர்டர் செய்திருக்கும் 1,500 டன் நிறையுள்ள லைட்ஹவுஸ் (வெளிச்சவீடு) கப்பல் ஒன்றை யூகோஸ்லேவியா கட்டிமுடித்திருக்கிறது. சமீபத்தில் இது இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாட்ன, ஜன 7

பீகாரில் உயர்தர யூரேனியம் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மலேஸியா

## சண்டை நிறுத்தத்துக்கு பிரிட்டன் வரவேற்பு

### பிரதமர் ஹியூமுடன் கென்னடி பேச்சுவார்த்தை

லண்டன், ஜன. 27

இந்தோனேஷியாவுக்கும் மலேஸியாவுக்குமிடையே சண்டைநிறுத்தம் ஏற்பட்டிருப்பதை பிரிட்டன் வரவேற்றிருக்கிறது.

அமெரிக்க அட்டோர்னி ஜெனரல் திரு. ராபர்ட் கென்னடி நேற்று பிரிட்டிஷ் பிரதமர் சர் ஹியூமை அவருடைய நாட்டுப்புற வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேசியபின் பிரிட்டன் சண்டைநிறுத்தத்தை வரவேற்பதாகப் பிரதமர் அறிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பிரதமர் சர் ஹியூம், வெளிநாட்டு மந்திரி திரு. பட்லர், காமன்வெல்த் மந்திரி திரு. சாண்ட்ஸ், பாதுகாப்பு மந்திரி திரு. பீட்டர் தோர்னிகிராட் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு. கென்னடி இன்று மீண்டும் பிரிட்டிஷ் பிரதமரை அவரது லண்டன் வாசஸ்தலமான டெவனிங் தெரு, 10-ம் இலக்கத்தில் சந்தித்துப் பேசவிருக்கிருர். இப்பேச்சுக்குப் பின் அவர் வாஷிங்டன் திரும்புவார்.

நேற்று ஜாகர்த்தா வந்து சேர்ந்த சம்போடிய அதிபர் இளவரசர் சிகானுக்கை, இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்னே வரவேற்றுப் பேசுகையில் பாங்காக்கில் நடைபெறவிருக்கும் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு, உச்சித் தலைவர்கள் மகாநாடு நடைபெற வேண்டுமா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் எனக் கூறினர்.

வெளிநாட்டு மந்திரிகளின் மகாநாட்டுக்கான திகதியை நிர்ணயிக்குமாறு தாய்லாந்து கேட்டுக் கொள்ளப் பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## கல்கத்தாவில் 3வது கிரிக்கெட் டெஸ்ட்

கல்கத்தா ஜன. 27

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வருகிற புதன்கிழமை கல்கத்தாவில் ஆரம்பமாகும். இந்தியக் கோஷ்டிக்கு இதுவரை தலைமை வகித்த பட்டோடி நவாப, அடுத்த மூன்று டெஸ்டுகளுக்கும் இந்தியக் கோஷ்டியின் கப்டனக இருப்பார்.

நேற்று பம்பாயில்முடிவடைந்த இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி எவருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம் வருமாறு:-

இந்தியா

1-வது இன்னிங்ஸ் 300 ரன்கள்


2-வது இன்னிங்ஸ் (8 விக்கெட்) 249 ரன்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

## ‘இராஜேஸ்வரி’ மீண்டும் சேவை

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் “இராஜேஸ்வரி” என்னும் மோட்டார் வள்ளம் சில தினங்களாக இயந்திரக்கோளாறினல் அதன் சேவை துண்டிக்கப்பட்டிருந்து மீண்டும் அதன் சேவையை இப்பொழுது ஆரம்பித்தமையால் நெடுந்தீவு மக்கள் அனுபவித்த போக்குவரத்துக் கஷ்டம் நீங்கியுள்ளது.



[இம்மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை அஹிம்சாமூர்த்தி காந்திஜியின்சிரார்த்ததினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. அதையொட்டி இக்கவிதை வெளியாகிறது.]

## மண்ணில் விண்ணைக் கண்டிடவே காந்தி பிறந்தார்!

—வித்துவான் சி. ஆறுமுகம்—

காந்தி பிறந்தார்! எங்கள் காந்தி பிறந்தார்—என்றும்
கடமை புரிந்திடவே காந்திபிறந்தார்!
காந்திபிறந்தார்! எங்கள் காந்திபிறந்தார்-எங்கும்
சாந்தி பிறந்திடவே காந்திபிறந்தார்!

★

உண்மையன்பு ஓங்கிடவே காந்திபிறந்தார்-எங்கும்
உரிமைக் குரலெழுப்பக் காந்திபிறந்தார்!
எண்ணம்முடித்திடவே காந்திபிறந்தார்!—என்றும்
ஏழமை தொலைந்திடவே காந்திபிறந்தார்!

★

சாதிப் பெருங்கொடுமை தகர்த்தெறிந்து-எங்கும்
தருமம் தழைத்திடவே காந்திபிறந்தார்!
நீதி நிலைநிறுத்தக் காந்திபிறந்தார! - எங்கும்
நேயம் மலர்ந்திடவே காந்திபிறந்தார்!

★

இமயம் முதற்குமரி எல்லையுமுள்ளார்-எங்கள்
இந்தியரென் றெண்ணிடவே காந்திபிறந்தார்!
சமய முதல் தத்துவங்கள் தரணியெங்கும்-என்றும்
தழைத்து வழிகாட்டுதற்கே காந்திபிறந்தார்!

★

அருளும் பொருளும் ஒன்றி அகிலமெங்கும்- இன்பம்
அரும்பி மலர்ந்திடவே காந்திபிறந்தார்!
இருளும் கொடும்போரின் இடியொழிந்து-அமைதி
எங்கும் இலங்கிடவே காந்திபிறந்தார்!

★

காந்திபிறந்தார்! எங்கள் காந்திபிறந்தார்-என்றும்
கருமம் கண்ணுறுயிருக்கக் காந்திபிறந்தார்!
மாந்தர் மகிழ்ந்திடவே காந்திபிறந்தார்! — இந்த
மண்ணில் விண்ணைக்கண்டிடவே காந்தி
பிறந்தார்!

## நமது டயறி

சமாதானப்பறவைபுரு.

ஆபிரிக்காவைக் கண்டுபிடித்தவர்கள் "லிவிங்ஸ்டன்," "ஸ்டான்லி."

சீனாவின் சனத்தொகை சுமார் 60 கோடி.

மிகக்குறைந்த பதவிக்காலத்துப் பெயர்போன இலங்கையின் சபாநாயகர் ரி. பி. சுபசிங்கா (4 மாதம்).

இராவணனின் பெயரை நினைவுறுத்தும் பூண்டின் பெயர் இராவணன் மீசை.

ஐக்கிய அரபுக்குடியரசின் பிரதமர் அலி சாப்ரி.

ரஷ்ய-யப்பானிய யுத்தம் 1904-1905-ல் நடைபெற்றது.

ரஷ்ய அரசியற்புரட்சி 1917-ல் நடைபெற்றது.

மகாகவிபாரதியார் 40 வருடம் உயிர் வாழ்ந்தார்.

கிரேக்க மகா காவியங்கள் "இலியட்" "ஒடிஸி" என்பன.

அனுப்பியவர்:- சி. பரமானந்தம்
வறணை,
அச்சுவேலி.



# மாணவர் மலர்



## அரசகுமாரியும் அவரை விதையும்

—திருமதி இரத்தினதேவி செல்லப்பா—

### யாருக்கு வெற்றி?

—செல்வி நந்தினி சிவதாசன்—

ரகு, வகுப்பில் முதலாவதாக வந்தால் நவீன புது ரக பார்க்கர் பேனா ஒன்று பரிசளிப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தார் ரகுவின் தந்தை. அதை முன்னிட்டு ரகு மிகவும் கவனமாகப் படித்துப் பரீட்சை எழுதியிருந்தான். அவனது எண்ணம், தான் வகுப்பில் முதல் என்பது. ஆனால் அவன் எண்ணத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்தான் சுந்தர். அவனும் ரகுவுடன் சமமான கெட்டிக்காரன்.

சுந்தரின் தம்பியும் ரகுவின் தம்பி மோகனும் இணைபிரியா நண்பர்கள். ஆனால் ரகுவும் சுந்தருமோ ஒருவரை ஒருவர் போட்டி போட்டதால் முகம் கொடுத்துப் பேசுவதுகூட இல்லை.

பரீட்சை முடிந்து மூன்றாவது நாள் ரகு, பாடசாலை விட்டவுடன் வீட்டிற்கு வந்தான். ஆனால் மோகனோ சரியாக ஆறு மணிக்கு வந்தான். "எங்கேடா இவ்வளவு நேரம் போயிருந்தாய்?" என்றார் அவன் தாயார். "நான் ஒரு தேநீர் விருந்துக்குப் போனேன்" என்றான் மோகன். ரகுவினதும் அவனது அக்காவினதும் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. இச் சிறுபயலைக்கூட விருந்துக்கு அழைக்கிறார்களே என எண்ணமிட்டபடி 'யார்? ஏன்? எங்கே?' எனக் கேள்விகளை அடுக்கினர். அதற்கு மோகன் "எனது நண்பன் ராஜனது வீட்டில் அவனது அண்ணா சுந்தர் வகுப்பில் முதலாவதாக வந்தபடியால் ஒரு 'பார்ட்டி' நடத்தினர். அதற்கு ராஜன் என்னையும் அழைத்திருந்தான். ஏனண்ணா சுந்தர்கூட உன்வகுப்புதானே? உனக்குத் தெரியாதா? உன் நண்பர்கள்கூட சிலர் வந்திருந்தார்களே" என்றான்.

ரகுவோ அசந்துபோய்விட்டான். அவனது தலை சுழன்றது. சுந்தர் வகுப்பில் முதல்! அப்போ தன்கதி...? பார்க்கர் பேனா...? அவனது எண்ணஅலைகள் பாய்ந்தன. ஒருவாறு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். ஆனால் அவன் கண்களிலிருந்து உருண்ட நீர் மணிகளை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதைக்கண்ட மோகனும் அவனுடன் சேர்ந்த அவன் அப்பாவும் ஒன்றுமே நடக்காததுபோல் கலகல என நகைத்துக் கொண்டே காலண்டரை அவன் முன்னால் வைத்தனர். அதைக்கண்ட ரகு வெட்கித் தலை குனிந்தான். ஆம்! அதில் என்ன இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? அன்று சித்திரை மாதம் முதல் தேதி. அவன் தந்தையும் தம்பியும் அவனைக் 'சித்திரை முட்டாள்' ஆக்கிவிட்டனர். அப்பொழுது...

'ஏப்ரல் பூல்...ஏப்ரல் பூல்... ஏப்ரல் பூல்'... என்னும் கானம் காற்றில மிதந்து வந்தது. பின்பு கோடை விடுமுறை விட்டார்கள். அதில் ரகுவும் சுந்தரும் இருவருமே முதலாவதாக வந்தனர். ரகுவிற்குப் பார்க்கர் பேனா கிடைத்தது.

சுந்தர் வீட்டில் விருந்து நடந்தது. அதற்கு ரகுவும் மோகனும் சென்றனர்.

ஓர் ஊரில், பிறவியிலேயே அரசகுமாரியான ஒருத்தியையே மணம் செய்துகொள்ளவேண்டுமென்று பேராவல் பூண்ட ஓர் அரசகுமாரன் இருந்தான். அப்படியான ஒருத்தியைத் தேடிக் கண்டடையுமுகமாக அவன் உலகில் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று தேடினான். ஏராளமானோரை அவன் சந்திக்க நேர்ந்தது. ஆனால் ஏதோ ஒன்று அவர்களிலெல்லாம் அவனுக்குப் பிடித்தமானதாகப் படவில்லை. இன்னும், அவர்களில் யார் உண்மையாகவே அரசகுமாரி என்றும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே அவன் மிக மிக மனமடிவுடன் மனை சேர்ந்தான்.

ஒரு நாள் மாலை நேரம். மின்னல் பேரிடியுடன் மழை பெய்யத் தொடங்கியது. அந்நேரம் அரண்மனைக் கதவுகளில் யாரோ தட்டும் ஓசை கேட்டது. அரசகுமாரனின் தந்தை கதவைத் திறந்தார். அங்கே ஓர் அழகிய பெண், தலை தொடக்கம் கால்வரை நீர் சொட்டச் சொட்ட நின்றுகொண்டிருந்தாள். அவள் தான் ஓர் அரசகுமாரி என்று கூறினாள்.

இதைக் கேள்வியுற்ற அரசகுமாரனின் தாய், அவள் உண்மையாகவே ஓர் அரசகுமாரிதானா என்பதை அறிய ஆவல் கொண்டு, படுக்கை அறைக்கு விரைந்து சென்று, கட்டிலிலே ஓர் அவரை விதையை வைத்து அதன்மேல் இருபது பஞ்சு மெத்தைகளை விரித்தாள். மெத்தைகளுக்கு மேலாக அதிலும் மென்மையான இன்னும் இருபது பஞ்சு மெத்தைகளைப் பரப்பினாள். அதன் பின்பு, அப்பெண்ணை அழைத்துச் சென்று அம்மெத்தையின்மேல் படுக்கச் செய்தாள்.

காலையானது. அரசகுமாரனின் தாய் அறிய ஆசையுடன் அறைக்கு விரைந்தோடி "நன்கு தூங்கினாயா" என; அவளோ "யான் கண்மூடியதே அருமை. என் படுக்கையில் ஏதோ ஒரு கடினமான பொருள் என் உடம்பை உறுத்திப் புண்படுத்தியது. அதனால் உறக்கமே கொள்ளவில்லை' என்றாள்.

உடனேயே அவர்கள், நாற்பது மெத்தைகளுக்கடியில் உள்ள அவரை விதையை உணரும் மென்மைத் தன்மை படைத்த இவள் ஓர் உண்மை அரசகுமாரியே என்று மிக மகிழ்ந்து, அவளை அரசகுமாரனுக்கு மணம் செய்து மனைவியாக்கினர். அரசகுமாரனும் தன் எண்ணம் நிறைவேறியதனால் பரம திருப்தியடைந்தான். அந்த அவரைவிதையோ சகலரின் பார்வைக்காகவும் நூதனசாலையில் வைக்கப்பட்டதாம்.

[இது தமிழாக்கம் செய்யப்பட்ட தேவதைக் கதைகளில் ஒன்று.]

### உயிரினங்கள் பேசுகின்றன?

-( தி சிறீஸ்கந்தராஜா )-

இன்னும் 20 ஆண்டுகளில் நாம் இதர உயிரினங்களுடன் பேச முடியும் என்று நம்பப்படுகிறது. கடல்களில் வாழும் டால்பின்கள் (கடற்பன்றி) தான் நாம் பேசப்போகும் முதலாவது உயிரினங்களாக இருக்கும். மனிதகுலத்தோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும். மீன் பிடிப்பதற்கான சிறந்த இடங்களுக்கு இவை நம்மை அழைத்துச் செல்லும். கடலின் அடி மட்டத்திலிருந்து மணல் துகள்களைக் கொண்டுவந்து கொடுக்கும். கடலில் விழும் ராக்கெட்டுக் கூடுகளைக்கூட எடுத்து வந்து கொடுக்கும்!

டால்பின்களுடைய நரம்பு அமைப்பு மிகப் பெரும் அளவிற்கு மனித மூளையை ஒத்துள்ளது. மனிதக் குரங்கை விட இவை நமக்கு மிகவும் நெருங்கியவை என்பதாக சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அண்மை ஆண்டுகளில் பல துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் டால்பின்களில் கருத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளனர். நீரின் உராய்வு அழுத்தத்தை அநேகமாக நீக்கிவிடும் தன்மையையுடைய டால்பினது தோலைப்பற்றி கப்பல்திட்டம் புனை நிபுணர்கள் ஆராய்ந்துவருகிறார்கள்.

### பொறுமைத் தெய்வம்

மகாத்மாகாந்தி அவர்கள் சிறைவாசத்தில் வாழும்போதும் கடவுள் தியானத்தை விடாமல் செய்துவந்தார். ஒரு நாள் அதிகநேரம் தியானம் செய்துகொண்டே இருந்தார். இவரைக் காவல் காக்கும் வீரருக்கு மிக்க பசி உண்டாகியது. பசியால்கோபம்கொண்ட அவர், தினந்தோறும் இந்தத் துன்பமே என்று தியானம் செய்தவரை உதைத்தார். அவ்வுதை வேகமாகப்பட்டதால் கீழே விழுந்து இரத்தம் ஒழுகியது. அச்சமயம் காந்தி, வீரரின் காலைத்தடவி, "உங்கள் காலை என் பல் குத்தியிருக்குமே? கடவுள் இவ்வளவு கொடுமையான பற்களை அமைத்ததற்கு மிகவும் வருந்துகிறேன்" என்றுஅழுதார். இவ்வித இரக்கமுள்ள சொற்களைக் கேட்ட வீரர் அவர் அடிகளில் விழுந்து வணங்கி, "பொறுமைத் தெய்வமே! தங்கள் வாயால் இழிவான இரண்டு சொல் கூறி என்னை வையுங்கள்" என்று வேண்டினார். அப்போது காந்திமகான், "பிற உயிர்களுக்குச் சிறிதும் துன்பம் தராத சொற்களைப் பேசுதலே உண்மை பேசுதலாகும், அவ்விதம் உண்மை பேசும் விரதத்தைக் கொண்ட யான் எவ்வாறு உம்முடைய மனம் வருந்தப் பேசுவேன்" என்று உண்மைபேசுதலின் தத்துவத்தைப் போதித்தார். பின்னர் வீரர் தாம் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி பலதரம் அவர் காலில் விழுந்து கேட்டுக் கொண்டார்.

—சிறீ

### மாணவர்சங்க நிர்வாகிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய பழைய விடுதிமாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ந. பரஞ்சோதி, உபதலைவர்: இ. கனகசிங்கம், காரியதரிசி: க. தவராசா, உபகாரியதரிசி: செ. முருகையா, தனாதிகாரி: க. கணேச

(5-ம்பக்கம் பார்க்க)

# பொலிஸ் நடத்தை பற்றி விசாரணைக் கமிஷன்

## சகல கட்சி ஆதரவையும் திரட்ட ராஜரத்ன முயற்சி

கொழும்பு, திங்கள்

பொலிஸ் தாக்குதல்பற்றி விசாரணைக் கமிட்டி ஒன்றை நியமிக்கவேண்டும்என்ற கோரிக்கைக்கு சகலகட்சிகளின் ஆதரவையும் திரட்டுவதில் திரு கே. எம். பி. ராஜரத்ன ஈடுபட்டிருக்கிறார்.

"நிக்கவெரட்டியா சம்பவம் அரசாங்கத்தின் பாஸிஸ மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அரசியல் எதிரிகளுடன் பொலிஸ் அட்டூழியத்தையும், காடைத்தனத்தையும் அரசாங்கம் பிரயோகிக்கிறது. அரசாங்கம் தனது கடைசிக் கட்டத்தில் நிற்கிறது. பண்டாரநாயககாவுடன், அதன் கவர்ச்சியும் போய்விட்டது. இப்போது பொலிசார் இஷ்டப்படி நடக்க, அரசாங்கம் சுதந்திரம் அளித்திருக்கிறது" என்றும் ராஜரத்ன கூறினார்.

"வெலிமடையில் ஒரு பொலிஸ்காரர் என்னைச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தினர். என் கட்சிக் காரியதரிசியின் காலை முறித்துவிட்டார்கள். கசிப்பு முதலாளிகளுடன் பொலிசார் எனது பகுதியில் அட்டூழியம் செய்துவருகிறார்கள். பொலிஸும், ராணுவமும் இந்த சோஷலிஸ்ட் அரசாங்கத்தின் கடைசிப் புகலிடமாய் இருக்கிறது. கடந்த 11-ம் திகதி இலங்கை வர்த்தக ஊழியர் வேலைநிறுத்தம் தீர்க்கப்படுவதற்கு முன்பே 60-க்கு மேலான ராணுவ, கடற்படை வீரர்கள் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்படாமலே வெலிக்கடையிலும் எக்கலையிலும் நிறுத்தப்பட்டார்கள். மூழ்கிக்கொண்டிருக்கும் அரசாங்கத்தின் கடைசிப் பிடி இது" என்றும் ராஜரத்ன கூறினார்.

"நாட்டில் குழப்பத்தை மூட்டிவிட்டு, அவசரகாலநிலையைப் பிரகடனம் செய்து பார்லிமெண்ட் இல்லாமலே ஆட்சி செய்வதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். அதிகார வேட்கை கொண்ட அதிகாரிகளே பொலிஸிலும், ராணுவத்திலும் ஆட்சி செலுத்துகிறார்கள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட சகல கட்சி எம். பிக்களும் சுதந்திர விசாரணைக் கமிஷன ஏற்படுத்தவேண்டும் என்ற எனது கோரிக்கைக்கு ஆதரவளிப்பார்கள் என நம்புகிறேன்" என்றும் கே. எம். பி. கூறினார்.

# வானொலிநிகழ்ச்சிகள்

## செவ்வாய் 28-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை. 7-15 தேர்த்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்-

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 திரை இசை,

இரவு 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள்—(ஞாயிறுபோற்றுதும்), 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்தியக் கோஷ்டி, 7-30 இசைக் கோவை—பி. எஸ். வீருசாமிப் பிள்ளை—நாகஸ்வரம், 8-00 மதுரகீதம் (மதராஸ்), 8-15 கவியரங்கம்—தலைவர்: தமிழ் நாட்டு முதலமைச்சர் எம். எம். பக்தவத்சலம், பொருள்: ஹிமய அரண், - கவிஞர்கள்: கி. வா. ஜகந்நாதன், சுத்தானந்த பாரதி, கொத்தமங்கலம் சுப்பு, சுப்பு ஆறுமுகம், மதியொளி, அப்துல் கரீம், உளுந்தூர்பேட்டை சண்முகம், எஸ். எஸ். சிதம்பரம்—(மதராஸ்—2).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு—'பொங்கலோ பொங்கல்,—கதம்பநிகழ்ச்சி (மதராஸ்—2) 12-35 தலைவாழை கதம்ப நிகழ்ச்சி, 1-00 கதம்பம் (மதராஸ்—2), 1-05 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை.

மாலை 5-05 குரல் இசை, 5-15 பொங்கும் மங்களம்—இசைச்சித்திரம், 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 தொழில்துறைப் பிரச்னைகள், 7-45 எம். எம். தண்டபாணிதேசிகர் பாட்டு.

# வானொலியில் கந்தபுராணம்

கொழும்பு, செவ்.

வெள்ளவத்தையிலுள்ள மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராணம் ஓதப்பட்டுப் பொருள் சொல்லபபட்டு வருகிறது. அவற்றின் ஒரு பகுதியை இலங்கை வானொலி ஒலிப்பதிவு செய்தது. இன்றிரவு 9-45-க்கு கந்தபுராணத்து தெய்வயானை அம்மன் திருமணப்படல விரிவுரை ஒலிபரப்பாகும்.

# கல்கத்தாவில் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கிலாந்து

1-வது இன்னிங்ஸ் 233 ரன்கள்
2-வது இன்னிங்ஸ்
(3 விக்கெட்) 206 ரன்கள்

எம் ஸி ஸி. கோஷ்டி சென்னையிலும், பம்பாயிலும் நடைபெற்ற முதல், இரண்டாம் டெஸ்டுகளிலும் பிரதேச கோஷ்டிகளுடன் விளையாடிய இதர ஆட்டங்களிலும் வெற்றி பெறவில்லை என்பதும், டெஸ்டுகள் உள்ளிட்டு எல்லா ஆட்டங்களுமே வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பம்பாய் டெஸ்டின்போது பல இங்கிலாந்து ஆட்டக்காரர்கள் காயமடைந்தும் சுகவீன முற்றும் ஆஸ்பத்திரியிலிருந்த போதிலும், எம். ஸி. ஸி. யின் சிறந்த விளையாட்டுக் காரணமாக தோல்வியிலிருந்து அது தப்பியது.

# மாணவர்சங்க . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம், உபதலைதிகாரி: த. தருமலிங்கம், இணைப்பத்திராதிபர்கள்: எஸ். குணேந்திரராசா, எஸ். சத்தியமூர்த்தி, கணக்காய்வாளர்: க. சிற்றம்பலம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக மு. சம்பந்தர், ம. துரைசிங்கம், க. பாலேந்திரன், அ. செல்வராசா, எஸ். குணரத்தினம், மா. நடேசலிங்கம், இ. துரைராசா, நு. மு. முகைதீன், வி. ஆறுமுகம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# வர்த்தகர்சங்க பெயர்மாற்றம்

உடுப்பிட்டி, திங்கள்

கடந்த நாலு வருடங்களாக கட்டைவேலி கிராமசபை வட்டாரத்தில் இயங்கிவந்த கட்டைவேலி வர்த்தகர் சங்கத்தை நெல்லியடி பட்டினசபையாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து 'நெல்லியடி வர்த்தகர் சங்கம்' என்று பெயர் மாற்றஞ் செய்வதற்கு நெல்லியடியைச் சேர்ந்த வர்த்தகர்கள் தீவிர முயற்சியிலீடுபட்டுள்ளனர்.

# "விரோதிகளுக்கு மத்தியிலும் இந்தியா முன்னேறுகிறது"

## ரஷ்ய பத்திரிகைகள் பாராட்டு

மாஸ்கோ, ஜன 27

மாஸ்கோ பத்திரிகைகள் இந்தியாவின் 14-வது குடியரசு தினம் சம்பந்தமாக ஏராளமான கட்டுரைகளையும், பேட்டிகளையும் வெளியிட்டதாக சோவியத் செய்தி ஸ்தாபனம் "டாஸ்" அறிவித்தது.

"கிரஸ்ஞயா ஸ்வெஸ்டா" என்ற பத்திரிகையில் டி. வோல்ஸ்கி என்பவர் எழுதியுள்ள விஷயத்தை கீழ்க்கண்டவாறு அது வெளியிட்டது:

"பகிரங்க விரோதிகள், போலி நண்பர்கள் ஆகியோரின் இடையூறுகளுக்கு மத்தியிலும் இந்தியா முன்னேறிச் செல்கிறது.

இந்தியாவில் எண்ணெய் வளம் கிடையாது எனமேற்கு நாட்டு நிபுணர்கள் கூறிவந்தனர். இந்தியாவுக்கு பெட்ரோல் ஏற்றுமதி செய்துவந்த அமெரிக்க, பிரிட்டிஷ் எண்ணெய்க்கம்பெனிகள் ஈவிரக்கமற்ற முறையில் இந்தியர்களைச் சுரண்டிவந்தன.

ஆனல் சோவியத் எண்ணெய் நிபுணர்கள் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டார்கள்.

மெற்கு நாட்டாரின் இந்த முடிவை நாம் பொய்யாக்கிவிட்டோம். இந்தியாவின் பலபகுதிகளில் பெருமளவு எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கண்டுபிடித்ததுமட்டுமல்ல அபிவிருத்தியும் செய்யப்பட்டது. இதனல் 700 கோடி ருபாய் வெளிச்செலாவணி இந்தியாவுக்குக் கிடைக்கும்.

இந்தியாவின் எண்ணெய்க் கதை, அந்த நாட்டுக்கு உண்மையான — நம்பிக்கையான நண்பர்கள் இருப்பதைக்காட்டுகிறது. சோவியத் மக்கள் இந்திய மக்களுக்கு தங்கள் இதயபூர்வமான நட்பையும், ஆழ்ந்த மரியாதையையும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்."

# கஜேந்திர பாதுகாப்பு

அனுராதபுரம், திங்கள்

பொலிசாரினல் சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் என்ற சந்தேகத்தின்மீது துரத்தப்பட்ட சிலரை, மூன்று யானைகள் காப்பாற்றின.

இரவு 10 மணிக்கு யக்கல-கல்குலம வீதியில் பொலிஸ் ஜீப் ஒன்று அவர்களைத் துரத்திச் சென்றது. ஆனல் ஜீப்புக்கும் ஓட்டம் பிடித்தவர்களுக்குமிடையில் 3 யானைகள் தோன்றின. அதிகாலை 2 மணிவரை அவை நகராமல் இருந்ததால் ஏமாற்றமடைந்த பொலிசார் ஸ்டேஷனுக்குத் திரும்பிவிட்டனர்.

# சனசமூக நிலையங்களின் கட்டுரைப்போட்டிமுடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ விழாவை யொட்டி யாழ்மாவட்ட சனசமூக நிலையங்களுக்கிடையே நடைபெற்ற கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு

**மேற்பிரிவு**

சி. சுவராசசிங்கம் கற்கோவளம் சனசமூக நிலையம், பருத்தித்துறை. பு. கண்ணபிரான் மாவை மத்தியசனசமூக நிலையம் மாவிட்டபுரம். ந. மல்லிகாதேவி ஸ்ரீ சுப்பிரமணியம் மாதர் சனசமுகநிலையம், நீர்வேலி.

**கீழ்ப்பிரிவு**

மா. புலேந்திரன் தொல்புரம் மத்திய சனசமூகநிலையம். தா. தேவமதுரம் காந்திநிலையம், யாழ்ப்பாணம். சு. யோகாம்பிகை ஸ்ரீகணேச சனசமூகநிலையம் சாவகச்சேரி.

நான்காம் வட்டார அங்கத்தவர் டாக்டர் எஸ. ஸி. சீனிவாசகம இதனை ஆதரித்துப் பேசுகையில் கூறியதாவது:-

இது விஷயத்தில் எல்லா அங்கத்தவர்களும் ஒரே நோக்கோடு எதிர்க்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிங்களவர் ஒருவர் இங்கு காரியதரிசியாக நியமிக்கப்படுவதற்கு நாம் எதிராக இருக்கவில்லை. ஆனல் எந்த இனத்தவரைச் சேர்ந்தாலும் தமிழ் தெரிந்த ஒருவராக இருக்க வேண்டும் என்பதுவே எமது விருப்பம். சபை கலைக்கப்பட நேர்ந்தாலும் கூட நாம் தமிழ் தெரியாத ஒருவரை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

5-ம் வட்டாரஅங்கத்தவரான திரு. சிவனடியார் காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. யான திரு. எஸ. ஜே. வி செல்வநாயகத்தைச் சந்தித்து சம்பந்தப்பட்ட மந்திரியுடன் இது விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பப்படவேண்டுமென திரு. கிருபாமூர்த்தி கொண்டுவந்த பிரேரணையை டாக்டர் சீனிவாசகம் ஆமோதித்தார்.

# ஆசிரியர் இல்லை

உடுப்பிட்டி திங்கள்

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்திற்கு உயர்தரவகுப்புகளுக்குப் பௌதிகவியல் பாடம் கற்பிக்கத் தகுந்த ஆசிரியர் இல்லாமையால் கடந்த வருடம் முழுவதும் மாணவர்கள் மிகவும் அவஸ்தைப் பட்டுள்ளார்கள்.

இவ்வருடத்திற்கும் இதுவரையில் எவரும் அனுப்பப்படவில்லையெனத் தெரிகிறது. இதனல் பல்கலைக்கழகப் பிரவேசப பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலைமை இனியும் நீடிக்குமானல் உயர்வகுப்பு மாணவர்கள் கல்லூரி முன்றலில் சத்தியாக்கிரகமிருக்க முடிவு செய்துள்ளனர்.


**வரி விளம்பரம்**

**வாடகைக்கு**

யாழ்ப்பாணப் பட்டினத்தில், தொலைபேசி முதலிய சகல நவீன வசதிகளுடனும் அமைந்த 2000 சதுர அடி முதல் மாடி ஆபீஸ் இடம் உண்டு.

ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மனுச்செய்க. 1896 A

**விற்பனைக்கு**

நல்ல நிலைமையிலுள்ள (L. C Smith) தட்டு அச்சு இயந்திரம் (ஆங்கிலம்) விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசத்தில் நேரில் பார்வையிடலாம். இசைப்புலவர் ந. சண்முகரத்தினம், உடுவில். 1908

**தொய்வு, நீரிழிவு**

தலைப்படுத்த உத்தரவாதம் [illegible] அரசியற் பிரமுகர் [illegible] சிகிச்சை பெற்ற [illegible] அடங்கிய கற்ற [illegible]. தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,


# வங்கியில் தமிழ்!

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் தமிழில் தான் சகல அலுவல்களும் நடைபெறவேண்டுமெனப் பலரும் கோருகிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையும் தனது அலுவல்களை தமிழிலேயே நடத்திவருகிறது. வங்கியுடன் தொடர்பு வைத்துள்ளவர்களும் ஸ்தாபனங்களுங் கூட பெருமளவில் தமிழிலேயே தொடர்புவைத்து வருகின்றனர். ஆனல் பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள ஒரு யலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தினர் மட்டும் மக்கள் வங்கிக்குச் சிங்களக் கசோலைகளையே அனுப்பிவருகின்றனர். இது வங்கியிலுள்ளவர்களுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

# சமஷ்டிக் கட்சியுடன் அரசாங்கத்துக்கு தொடர்பா?

## பிரதமருக்கு ஆசியர் கடிதம்

கொழும்பு, திங்கள்

"சமஷ்டி விரோதச் சக்திகள் இவ்வாறு பழிவாங்கப் படுவதனலும், பாரபட்சமாக நடத்தப்படுவதனலும் அரசாங்கம் வடக்கிலுள்ள சமஷ்டிவாதிகளை இரகசியமாக ஆதரித்து வருகிறதென்றும், சமஷ்டிவாதிகளுடன் தங்களுக்குத் தொடர்பில்லை என அது தென்பகுதி மக்களை ஏமாற்றி வருகிறதென்றும் ஒருவர் கணிக்க முடியும்.

பூநகரியைச் சேர்ந்த திரு. வி. ஆனந்தசங்கரி என்ற ஆசிரியர், பிரதமருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

திரு. ஆனந்தசங்கரி, 1960 ம் ஆண்டு மார்ச், ஜூலை மாதங்களில் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பாக கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்.

அவரது கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"கடந்த 1-3-63-ல் நான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலிருந்து கிளிநொச்சித் தொகுதியிலுள்ள யாழ்ப்பாணம் பூநகரி மகாவித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டேன். மூன்று மாதங்களுக்குக்கிடையில் மீண்டும் நான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டேன்.

இந்தத் திடீர் மாற்றம் கிளிநொச்சி சமஷ்டி எம். பி.யின் தூண்டுதலால் மேற்கொள்ளப்பட்டது என்பதை அறிந்து, இந்த மாற்றத்தை நான் ஆட்சேபித்தேன். பூநகரி கிராம சபையும், பெற்றோரும் எனது இடமாற்றத்தை எதிர்த்து மந்திரியை ஒரு தூது கோஷ்டி மூலம் சந்தித்தனர். இதன் காரணமாக 1963 ஜூன் மாதம் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது.

ஆனல் மீண்டும் 5 மாதங்களுக்கிடையில், 1963 டிசம்பர் 22-ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு, 1964 ஜனவரி 1-ம் திகதி மாறிச்செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. எனது ஆட்சேபங்களும், பூநகரி கிராமசபை, பெற்றோர்கள், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஆகியவற்றின் ஆட்சேபனைகளும் கல்வி அமைச்சினல் உதாசீனம் செய்யப்பட்டன

தற்போதைய கிளிநொச்சியின் சமஷ்டி எம் பி.க்கு எதிராக நான் தேர்தலில் போட்டியிட்டது காரணமாக அவரே, இந்த இடமாற்றத்துக்குக் காரணமாய் இருந்தார் என நான் கூறவிரும்புகின்றேன். இந்த எம். பி.யும், சமஷ்டிக் கட்சியின் உயர் வட்டாரமும் கிளிநொச்சியில் இருப்பது தங்கள் எதிர்காலத்துக்கு அபாயம் எனக்கருதுகிறார்கள். சமஷ்டிக்கட்சியின் நீதியற்ற, கண்ணியமற்ற இந்த வலையில் கல்வி அமைச்சு விழுந்திருப்பது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது."

# பெப்ரவரி 17-க்குமுன் நேரடி நடவடிக்கை

## தமிழரசுக் கட்சி கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானம்

வவனியா, ஞாயிறு

தமிழ் பகுதிகளில் சிங்களத் திணிப்பை எதிர்த்து அடுத்த மாதம் 17-ந் திகதிக்கு முன் நேரடிநடவடிக்கையில் இறங்குவதென, வவனியாவில் இன்று திரு. எஸ். எம். ராஜமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. வவனியா பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தற்பொழுதுள்ள நிலைமையில் நேரடிநடவடிக்கையில் இறங்க வேண்டிய அவசியத்தைப் பற்றி பலர் வற்புறுத்திப் பேசினர்கள்.

இன்று மாலை 4 மணிக்கு தமிழரசுக்கட்சிக் கிளை ஒன்று வவனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மலைநாட்டில் எழுந்துள்ள நிலைமை பற்றி திரு. அமிர்தலிங்கம் எடுத்துக்கூறினர். டாக்டர் நாகநாதன் மலைநாட்டில் தொடர்ந்து சுற்றுப்பிரயாணம் செய்து வருவதால் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இலங்கையின் சுதந்திரதினமா பெப்ரவரி நான்காம் திகதியன்று தமிழ் பகுதிகளில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## 88 குளங்கள் திருத்தப்படும்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் காட்டுப்பகுதியிலுள்ள 88 குளங்களைத் திருத்தியமைக்க நீர்ப்பாசனப் பகுதி முடிவு செய்துள்ளது.

இக்குளங்கள் திருத்தப்பட்ட பின் வேலையற்றிருக்கும் மாணவர்களுக்கென இப்பகுதிகளில் குடியேற்றத்திட்டத்தை அமுல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


## ஆரம்ப திறப்பு விழா

**பீ. எஸ். டிஸ்பென்சறி**

75, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்

(பஸ் நிலையத்திற்கு முன்பாக)

1964-ம் ஆண்டு தை மாதம் 31-ந் திகதி (31-1-64) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு காலம் சென்ற பிரபல வைத்தியரும், இளைப்பாறிய மாகாண சிஸ்ஷகரும், டாக்டர் பி. எஸ். சுப்பிரமணியம் அவர்களின் கீழ் பல ஆண்டுகளாக சேவை செய்தவரும், பல நோயாளர்களின் ஆதரவைப் பெற்றவருமான ரி கே. இராசரெட்ணம் அவர்கள் தற்பொழுது மேற்படி வைத்திய நிலையத்தை ஸ்தாபிக்கிறார். அங்நிலையத்தில் அனுபவம் வாய்ந்த பரிசோதகர் கடமையாற்றுவார்.

என்றும் பி. எஸ். டிஸ்பென்சறியை மறவாதீர்கள். 1765



## 30-1-64 வியாழன் முதல் சினிமாஸ் திரைகளில்

மகத்தான ஆரம்பம்

எஸ். எஸ். ராஜேந்திரன் — பத்மினி

நடித்த

# காட்டு ரோஜா

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

ராஜ் (நீர்கொழும்பு) குயின்லன்ட் (நுவரெலியா) விஜயா (அம்பாறை) வெம்பினி (கண்டி)

வியப்பு, திகைப்பு, வி.விறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!

உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!
உணர்ச்சிக் கோர்வையிலே உருவான
உன்னத குடும்பச் சித்திரம்!!

எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி
எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்
எம். வி. ராஜம்மா - நாகேஷ்- அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

தயாரிப்பு ஜி. என். வேலுமணி — டைரக்ஷன் கே. சங்கர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — ராஜ்கபூர் — பத்மினி நடித்த **ஜிஸ் தேஷ் மென் கங்கா பேதிஹை**

மனோகரா (யாழ்ப்பாணம்) — ரங்கராவ்—பானுமதி நடித்த **அன்னை**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 13-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## "கூட்டுறவு ஊழல் நிர்வாகமே வாழ்க்கைச் செலவு உயரக் காரணம்"

—டட்லி

பொல்காவலை, திங்கள்

"கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் ஊழல் நிர்வாகம்தான் வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதற்குக் காரணம்" என திரு. டட்லி சேனநாயக்கா கூட்டுறவு யூனியன் கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

'வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காகவே கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் தலையீட்டினாலும் ஊழல் நிர்வாகத்தினாலும் எதிர்மாறான பலனேற்பட்டுள்ளன. தகுதியற்றவர்கள் அரசியல் காரணங்களுக்காக நிர்வாகப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் மக்களுக்கு உரிய நன்மைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன" என்றும் டட்லி கூறினர்.

## கலுகல்லை யோசனை: பட்டதாரிகள் அதிருப்தி

கொழும்பு, திங்கள்

வேலையற்றிருக்கும் தமிழ்ப் பட்டதாரிகளைக் கனடாவுக்குச் செல்லும்படி கல்விமந்திரி கலுகல்லை அறிவித்தது அவர்களிடையே மனக் கிலேசத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

உள்நாட்டில் தங்களுக்கு வேலையளிக்கப்படுவது சம்பந்தமாக விவாதிப்பதற்கே மந்திரியுடன் தாங்கள் பேட்டி கோரியதாயும், வெளிநாடுகளுக்குச் செல்லத் தாங்கள் தயாராய் இருந்திருப்பின், மந்திரியுடன் பேட்டியைக் கோரியிருக்கமாட்டோம் என்றும் வேலையற்ற தமிழ்ப் பட்டதாரிகள் சங்க அதிகாரி ஒருவர் கூறினர். தமிழ்ப் பாடசாலைகளில் வேலைக்கான காலி இடங்கள் இருப்பதாயும், அரசாங்கம் விரும்பினால் சுலபமாகத் தங்களை வேலைக்கமர்த்த முடியுமென்றும் அவர் மேலும் கூறினர்.

## ஆசிரியர் இடமாற்றம்

உடுப்பிட்டி, திங்கள்

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த இரண்டு வருடங்களாக ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வே. தங்கராசா இம்மாதம் தொடக்கம் அல்வாய் தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், அங்கு கடமையாற்றிய திரு. எஸ். பி. ஸ்ரீபதி குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

## அதிபர் இடமாற்றம்

உடுப்பிட்டி, திங்கள்

யாழ். வடமராட்சி மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. நடராசா கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கும் திரு. கே. கந்தப்பு வடமராட்சி மத்திய கல்லூரிக்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்கள்.

## "அரசாங்கம் உடனடியாக விலகவேண்டும்"

பண்டாரவளை, திங்கள்

"திறமையின்மை காரணமாக அரசாங்கம் நடத்திவரும் ஊழல் நிர்வாகத்தினால் எல்லா அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன. உடனடியாக அரசாங்கம் ராஜினமாச் செய்யவேண்டும்" என மக்கள் கேட்கும் காலம் இப்போது வந்துவிட்டது" என பண்டாரவளை நகரசபைக் கூட்டத்தில் திரு. கே. ஐ. ஜமலிதீன் பேசும்போது கூறினர்.

# "மீண்டும் பலமான போராட்டம் நடத்துவேன்"

## உண்ணாவிரதம் முடித்த "பொடிபுத்தா" அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

தனது போராட்டத்தை சிறிது தளர்த்திதான் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகவும், ஆனால் தனது இயக்கத்தை பலப்படுத்திக் கொண்டு தொடர்ந்து போராட்டத்தை நடத்தப் போவதாகவும் திரு. முதியான்சே தென்னக்கூன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. முதியான்சே தென்னக்கூன் உண்ணாவிரதத்தை கைவிடுவதற்கு இணக்கம் ஒன்றைக் கொண்டுவந்த குருநாகல் எம். பி. திரு. ஜயபத்திரனவை மக்கள் போற்றி ஆரவாரித்தனர். திரு. முதியான்சே உண்ணாவிரதத்தைக் கைவிட்ட சிறிது நேரத்தில் மக்கள் கூட்டம் திரு. ஜெயபத்திரனவை சூழ்ந்து கொண்டு போற்றி ஆரவாரித்தது.

திரு. முதியான்சே உண்ணாவிரதத்தை கைவிடுவதற்கு முன்னர் தான் முதியான்சேயுடன் சுமார் ஒரு மணித்தியாலம் வரை கதைத்த, பிரதமர் வரமாலிருக்கும் சூழ்நிலையிலேயே ஒரு இணக்கம் கண்டதாக திரு. ஜயபத்திரன தெரிவித்தார். திரு. ஜயபத்திரன வருவதற்கு முன்னர் ஆயிரக்கணக்கான விவசாயிகள் உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் இல்லாவிடில் தாங்கள் தற்கொலை செய்யப்போவதாகவும் தெரிவித்தனர். உண்ணாவிரதத்தை சுமார் பிற்பகல் 1 மணிவரையில் கைவிட்டபோதிலும் மாலை 5 மணிவரை திரு. முதியான்சே தான் உண்ணாவிரதமிருந்து வந்த குடிசையிலேயே இருந்தார். மாலை 5 மணிக்குப் பின்னரே அவர் குருநாகலையில் உள்ள தனிப்பட்ட ஆஸ்பத்திரி ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இவரை ஏற்றிச் சென்ற 'அம்புலன்ஸ்'ஸில் மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவும், திரு விஜயபாகு விஜய சிங்காவும் கூடச் சென்றனர். திரு. முதியான்சே பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"நிக்கவரெட்டியா விவசாயிகள் கொழும்புக்கு ஊர்வலமாகச் சென்று தங்கள் குறைபாடுகளை பிரதமருக்கும், அவரது மந்திரிகளுக்கும் கூறுவதற்கு தடை செய்தமையாலேயே நான் உண்ணாவிரதத்தை மேற்கொண்டேன். தற்போதைய அரசாங்கத்தை தெரிந்தெடுத்தவர்கள் விவசாயிகளே. ஆனால் ஸ்ரீமாவோ அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையீனத்தால் விவசாயிகளுக்கு பெரும் கஷ்டங்கள் விளைந்துள்ளன.

விவசாயிகளின் மகஜரை ஏற்க விரும்பாத அரசாங்கம் பொலிஸ் படையைக்கொண்டு ஊர்வலத்தை பலாத்காரமாக தடைசெய்தது. பொலிஸாரின் துப்பாக்கிக்குண்டுக்கு இரையாகி எனது உயிரைத் தியாகம்செய்தாவது விவசாயிகளின் குறைபாடுகளை கூறிவிடவே அன்று திடம்கொண்டிருந்தேன். ஆனால் பொலிஸார் கண்ணீர்ப்புகையைப் பாவித்து ஊர்வலத்தைக் கலைத்தனர். இதனால் எனது எண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லை. இம்மாதம் 21-ம் திகதியிலிருந்து ஒரு சொட்டு தண்ணீர்கூட குடியாது நான் உண்ணாவிரதமிருந்தேன். ஏழை விவசாயிகளுக்காகவே துன்பப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம்.

எனது உண்ணாவிரதம் உபயோகமில்லாதுபோய்விட்டது. அரசாங்க பிரதிநிதிகளாக எவரும் வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்களே வந்து ஆறுதல் கூறினர்கள். உறவினர்களும் நண்பர்களும் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டனர். அதன் பெயரிலேயே உண்ணாவிரதத்தைக் கைவிட்டேன். முதலில் எனது பெற்றோர் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி கேட்டனர். ஆயினும் நான் கைவிடவில்லை. இதனால் நான் பெற்றோரை நேசிக்கவில்லை என்பதல்ல; விவசாயிகளை அதிகம் நேசிக்கிறேன் என்பதே அதற்குக் காரணம். போராட்டத்தைச் சிறிது தளர்த்தியுள்ளேன். இயக்கத்தைப் பலப்படுத்திபோராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவேன்."

## ஆஸ்பத்திரிக் . . .

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

த்து வந்த கடிதம் தனிச்சிங்களத்தில் இருந்தமையால் அதை ஆட்சேபித்து சுகாதார மந்திரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தனிச்சிங்களக் கடிதத்தையும் அவர் மந்திரிக்கு அனுப்பியுள்ள ஆட்சேபக் கடிதத்துடன் இணைத்துள்ளார். அந்த ஆட்சேபக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

உங்கள் இலாகாவிலிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் எழுதியிருப்பது என்னவென்று என்னல் புரிந்துகொள்ள முடியாமையால் நான் அக்கடிதத்தை உங்களுக்கு அனுப்புகிறேன். இக்கடிதத்தை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் அனுப்பினலே என்னல் புரிந்துகொள்ள முடியும். நாட்டு நலனின் அக்கறை கொண்டவன் என்ற முறையில் இவ்வித செயல்கள் இனியும் நடைபெருமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

**யாழ். ஆஸ்பத்திரி குழு அங்கத்தவர்கள்**

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக் குழு அங்கத்தவர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ள

திரு. எள். வி கதிரவேலு, திரு. .எஸ். சின்னத்துரை, திரு கே. குணரத்தினம், திரு. எஸ். கனகசுந்தரம், திரு. கே. சதாசிவம், திரு. எம். கதிரவேலு, திரு. எஸ். முத்துக்குமாரசாமி, திரு எஸ். சுப்பிரமணியம், டாக்டர் ஆர். கந்தையா, முதலியார் வி முத்துத்தம்பி, திரு. எஸ். பி. வேலாயுதபிள்ளை, திரு. எம். ஏ. வி ஏ. காதர், ஹாஜி வி எம்.எம். அபுசாலி, யாழ்ப்பாணம் சுகதார சேவை அத்தியட்சகர், வடபகுதி மராமத்து பகுதி நிர்வாக பொறியியலாளர், யாழ்ப்பாண மாநகர சபைக் கமிஷனர்.

## எருமையின் எகத்தாளம்

கொழும்பு, திங்கள்

கொட்டாஞ்சேனையிலிருந்து மூர்க்கம் பிடித்த பெரிய எருமையொன்று கொழும்பு முகத்துவாரத்துக்கு ஓடி இரு இடங்களிலும் இருபெண்களைத் தாக்கியதால் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். முகத்துவாரத்தைச் சேர்ந்த 75 வயதான ஜேன் பெர்னண்டோவும், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த 38 வயதான அண்ணுசாமி காவேரியுமே அவர்கள.

## ஏழு குட்டிகள் ஈன்ற வெள்ளாடு

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாய் தெற்கில் வசிக்கும் வல்லிபுரம் மார்க்கண்டு என்னும் விவசாயிக்குச் சொந்தமான வெள்ளாடு ஒன்று 7 குட்டிகளை ஈன்றது. மறிக்குட்டியுட்பட நாலு கிடாய்க் குட்டிகள் பிறந்த மூன்று மணி நேரத்தின்பின் இறந்துவிட்டன.